ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2472/02 - 2026 ජනවාරි මස 19 වැනි සඳුදා - 2026.01.19

*2472/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### கௌரவ சனாதிபதியின் பிரகடனம்

(முத்திரை)

**அநுர குமார திசாநாயக்க.**

நலம் பெறுக!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், அரசின் தலைவரும், நிறைவேற்றுத்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும், படைக்கலந் தாங்கிய படைகளின் தளபதியுமான அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அனைவரையும் வாழ்த்தி இத்தால் அறியத் தருகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கடற்படையைச் சேர்ந்த நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் பணியாற்றும் அனைத்து தரங்களையும் சேர்ந்த பதவிகளை வகிப்போருக்கும், இலங்கைக் கடற்படையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய சிவில் பணியாளர்களுக்கும், கடற்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நினைவுப் பதக்கமொன்றை வழங்குவது எனது அபிலாஷை என்பதாலும்,

இதன் முதற்கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கடற்படையின் இப்பதக்கத்தினைப் பெறுவதற்குரிய தகைமைகளைக் கொண்ட அனைத்து தரங்களை சேர்ந்தவர்களுக்கும், அவர்களால் பெரிதும் போற்றப்படும் புதிய பதக்கமொன்றைத் தாபித்து, உருவாக்கி, வடிவமைப்பதில் நான் மகிழ்ச்சியும் விருப்பமும் கொண்டுள்ளதாலும்,

இதன் முதற்கொண்டு இப்பதக்கத்தினை நிர்வகிப்பதற்காக இதன்பின்னர் மீற முடியாதவாறு பேணப்பட வேண்டிய பின்வரும் விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நான் இவ்வாறு வகுத்து விதித்தமைத்து நிறுவுகின்றேன்.

முதலாவதாக:

பெயர் சூட்டலும் அறிமுகமும் - இப் பதக்கம் ‘இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம்’ எனப் பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

1A - G 46131 — 354 (2026/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இரண்டாவதாக:

விவரம் - வைர வடிவிலான பல்கோணி வடிவுடன் கப்ரோனிகல் உலோகத்தால் செய்யப்பட்டு வெள்ளி முலாம் பூசப்பட்டு ஆக்கப்பட வேண்டிய இப் பதக்கத்தின் முகப்புப் பக்கத்தின் மையத்தில் காணப்படுகின்ற இலங்கைத் தேசப்படம் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பிற்கான வகிபாகத்தையும் தீவு முழுவதற்குமான அபிமானமிக்க சேவையையும், அதற்கு மேலாக இருபுறமும் 1950 தொடக்கம் 2025 வரையிலான இலங்கைக் கடற்படையின் அபிமானமிக்க 75 ஆண்டுகால வெற்றியின் அடையாளத்தையும், இலங்கைத் தேசப்படத்திற்கு வெளியே கடல் அலைகள் மூலம் இலங்கைக் கடற்படையுடன் பின்னிப் பிணைந்த சமுத்திரத்தின் பெருமையையும், போர்க் கப்பல்கள் மூலம் கடற்படையின் சக்தி, வலிமை, தொழில்நுட்ப வளர்ச்சி, பாதுகாப்பு என்பவற்றையும் எடுத்துக்காட்டும் விதத்தில் இப்பதக்கம் ஆக்கப்பட வேண்டுமெனவும், பதக்கத்தின் எதிர்ப்பக்கத்தில் இலங்கைக் கடற்படையின் சின்னம் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் விதிக்கப்படுகின்றது.

மூன்றாவதாக:

பட்டி – பட்டி 5 செ.மீ. நீளமும் 3 செ.மீ. அகலமும் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதுடன், அதன் மையத்தில் 2 மி.மீ. அகலமான நீல நிறக் கோடும் (கடற்படையின் நிறம்), அதன் இருபுறமும் 5 மி.மீ. அகலமான இரண்டு வெள்ளை (வைர வெள்ளை) நிறக் கோடுகளும், அதன் இருமுனைகளிலும் 9 மி.மீ. அளவான இரு நீல நிறக் (கடற்படையின் நிறம்) கோடுகளும் இருத்தல் வேண்டும். இந்தப் பட்டியின் நீல நிறம் (கடற்படையின் நிறம்) சமுத்திரத்தை எடுத்துக் காட்டுகின்றது என்பதுடன், வெள்ளை நிறம் (வைர வெள்ளை) சமாதானம், தூய்மை என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றது. இந்நிறங்களையுடைய பட்டியொன்றில் தொங்கவிடப்பட்டவாறு இப்பதக்கத்தை மார்பின் இடதுபுறமாக அணிய வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

நான்காவதாக:

தகைமை - இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு திசெம்பர் மாதம் ஒன்பதாம் திகதிக்கு, இலங்கை கடற்படையின் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளைச் சேர்ந்த முனைப்புடனான சேவையில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் (அடிப்படை பயிற்சிப் பாடநெறிகளில் கலந்து கொண்டுள்ளோர் உட்பட), இலங்கைக் கடற்படையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய சிவில் பணியாளர்களுக்கும் இங்கு இதனகத்துப் பின்னர் வகுத்துக் குறிப்பிட்டுக் காட்டும் ஒழுங்குவிதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரகாரம், இப்பதக்கத்தைப் பெறத்தகுதியானவர்கள் என கடற்படைத் தளபதியால் பரிந்துரைக்கப்படுகின்ற சகல நபர்களுக்கும் இப்பதக்கம் வழங்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

ஐந்தாவதாக:

பதிவு - இப்பதக்கம் வழங்கப்படுகின்ற அனைவரினதும் பெயர்கள், இலங்கைக் கடற்படை கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டுமெனவும், அத்தகைய பதிவேடுகள் அந்தந்த கட்டளையிடும் தளபதிகளின் பணிப்பின் கீழ் பேணப்படுதல் வேண்டுமெனவும் விதிக்கப்படுகின்றது.

ஆறாவதாக:

அணியும் ஒழுங்குவரிசை – நன்மதிப்புச் சின்னங்கள் மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்குவரிசையைக் காட்டும் உத்தியோகபூர்வ ஏட்டில், விசேட தினத்தைக் கொண்டாடும் வகையில் வழங்கப்பட்டுள்ள, இலங்கைக் குடியரசின் கடற்படை பொன்விழா நினைவுப் பதக்கத்திற்கு முன்னதாக, கடற்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம் அணியப்படுதல் வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

ஏழாவதாக:

சிற்றுருவ அமைப்புகள் - பதக்கங்கள் வழங்கப்பெற்றவர்கள் சில சந்தர்ப்பங்களில் அணிந்து கொள்ளக்கூடியதும், சிற்றுருவ நன்மதிப்புச் சின்னம் என அழைக்கப்படுவதுமான, சிற்றுருவ பதக்கத்தின் அளவு அண்ணளவாக, வழங்கப்பட்ட பதக்கத்தின் அரைவாசி அளவுடையதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அச்சிற்றுருவ நன்மதிப்புச் சின்னத்தின் முத்திரை பொறிக்கப்பட்ட மாதிரியொன்று, இலங்கைக் கடற்படை தலைமையகத்தில் வைக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டுமெனவும் விதிக்கப்படுகின்றது.

எட்டாவதாக:

பறிமுதல் செய்தலும் மீளளித்தலும் - இங்கு இதனகத்துப் பின்னர் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளின் கீழ், எவரேனும் ஒருவருக்கு அளிக்கப்பட்ட பதக்கமொன்றை வறிதாக்கி நிராகரிப்பதற்கான அதிகாரம் மற்றும் அவ்வாறு வறிதாக்கப்படும் பதக்கமொன்றை மீண்டும் செல்லுபடியாகும் விதத்தில் அளிப்பதற்கான அதிகாரம் கௌரவ சனாதிபதி என்ற வகையில் எனக்கு உண்டு என விதிக்கப்படுகின்றது. மேலும், அவ்வாறு அளிக்கப்பட்ட பதக்கமொன்றை வறிதாக்குதல் அல்லது மீளளித்தல் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அது தொடர்பாக உரிய கடற்படை கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலட்சினையின் கீழ், இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி சனாதிபதி அலுவலத்தில் வழங்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியின் ஆணைப்படி,

கலாநிதி **என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

## இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம்

சனாதிபதி ஆணைச்சீட்டில் விதிக்கப்பெற்ற ஏற்பாடுகளை விளக்கமான வகையில் கடற்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம் வழங்குதல், வறிதாக்குதல், மீளளித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற விடயங்கள் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ சனாதிபதி அவர்களினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கௌரவ சனாதிபதியின் ஆணைப்படி,

கலாநிதி **என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு - 01
2025, திசெம்பர் 12.

## இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம் தொடர்பான ஒழுங்குவிதிகள்

1. இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு திசெம்பர் மாதம் ஒன்பதாம் திகதிக்கு, இலங்கை கடற்படையின் நிரந்தர மற்றும் தொண்டர் கடற்படையில் முனைப்புடனான சேவையில் ஈடுபட்டுள்ளவர்களும் (அடிப்படை பயிற்சிநெறிகளில் பங்குபற்றுவோர் உட்பட), இலங்கை கடற்படையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய சிவில் பணியாளர்களும், இங்கு இதனகத்துப் பின்னர் வகுத்துக் குறிப்பிட்டுக் காட்டும் ஒழுங்குவிதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரகாரம், இப்பதக்கத்தைப் பெறத்தகுதியானவர்கள் என கடற்படைத் தளபதியால் பரிந்துரைக்கப்படுகின்ற நபர்களும் இப்பதக்கத்தைப் பெறத் தகுதியுடையோராவர்.

2. பின்வரும் நபர்கள் பதக்கம் பெறத் தகுதியற்றவராவார்கள்.

   (அ) 2025 திசெம்பர் மாதம் 09 ஆம் திகதிக்கு விடுமுறை பெற்றுக்கொள்ளாது சேவைக்கு சமுகமளிக்காதவர்கள் அல்லது சேவையிலிருந்து தப்பியோடிய நபர்கள்

   (ஆ) 2025 திசெம்பர் மாதம் 09 ஆம் திகதிக்கு கடமையைத் தவிர்க்க உடல் நலம் குன்றியது போல் பாசாங்கு செய்தவர்களும், தாங்களே தங்களுக்கு உடலூறு ஏற்படுத்திக் கொண்டவர்களும், வேண்டுமென்றே கடமைகளைத் தட்டிக்கழித்தவர்களும்.

3. மரணத்தின் பின்னரும் இவ் அளிப்பு, அளிப்பு பெறுபவரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது நெருங்கிய உறவினரால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட முடியும்.

4. ஒவ்வொரு பரிந்துரையுடனும், பரிந்துரைக்கப்படுபவர்களின் இலக்கம், பதவி வரிசை மற்றும் முழுப்பெயர் ஆகிய விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. பதக்கம் வழங்கப்பட்டோரின் பெயர்கள், உரிய கடற்படை கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், இப் பதக்கம் பெறுநர்கள் அனைவரினதும் பெயர்ப்பட்டியல்கள் கடற்படைத் தளபதியின் பணிப்பின் கீழ் பேணப்படுதல் வேண்டும்.

6. பதக்கம் அளிக்கப்பட்டிருந்தபோது கடற்படையிலிருந்து அபகீர்த்தியுடன் சேவையிலிருந்து வெளியேற்றப்படும், அவமானத்துடன் விலக்கப்படும், அகற்றப்படும் அல்லது அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்வதற்கு அல்லது ஓய்வு பெறுவதற்கு பணிக்கப்படும் கடற்படையைச் சேர்ந்த ஒவ்வொரு நபருக்கும், கௌரவ சனாதிபதியவர்களால் வேறுவிதமான உத்தரவு பிறப்பிக்கப்படாதவரை அவருக்கு அளிக்கப்பட்ட பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

7. எவரேனும் ஒருவருக்கு இப்பதக்கம் அளிக்கப்பட்டிருந்தபோது, அரச துரோகம், அரச பிரிவினை, கலகங்கள், கோழைத்தனம், இயற்கைக்கு மாறுபட்ட விதத்தில் அவமானமுடைய நடத்தை போன்ற ஒரு குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அல்லது ஒழுக்கக்கேடான விடயங்கள் காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டிருப்பின் அல்லது கடற்படைச் சட்டத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கையில் சிவில் அதிகாரிகளால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படின், அந்த நபருக்கு கௌரவ சனாதிபதியவர்களால் வேறுவிதமாக கட்டளை பிறப்பிக்கப்பட்டாலன்றி, அவருக்கு அளிக்கப்பட்ட பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

8. எவரேனுமொருவரால் இழக்கப்பட்ட பதக்கத்தை, தனது தற்றுணிபுக்கு அமைய மீளளிப்பதற்கு சனாதிபதி அவர்களுக்கு முடியும்.

9. இழக்கச் செய்தல் அல்லது மீளளித்தல் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அது தொடர்பான அறிவித்தலொன்று உரிய கடற்படை கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.

10. எவரேனுமோர் உத்தியோகத்தர், கடற்படை வீரரொருவர் அல்லது சிவில் பணியாளரொருவர், தனது தொலைந்த பதக்கத்துக்குப் பதிலாக வேறொரு பதக்கத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பாராயின், அவ் உத்தியோகத்தர், கடற்படை வீரர் அல்லது சிவில் பணியாளர் அப் பதக்கம் தொலைந்து போன விதம் பற்றிய வாக்குமூலமொன்றை கட்டளையிடும் அதிகாரியிடம்/ உயர் அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர், அந்த வாக்குமூலத்தை உரியமுறையில் கௌரவ சனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பதக்கம் தொலைந்தமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் திருப்திகரமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டால், தொலைந்த பதக்கத்திற்குப் பதிலாக வேறொரு பதக்கத்தை, உரிய தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

11. இவ்வொழுங்குவிதிகளில்:

(அ) 'கடற்படை' எனும் பதம் - இலங்கை கடற்படை என்பதைக் குறிக்கும் என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

**கடற்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம்**

முன்பக்கம்




பின்பக்கம்



EOG 01 - 0189